உ
சிவமயம்

# சைவ நெறி

ஆண்டு — 9



## துரித மீட்டலுக்கான வினா விடை

க. சந்திரசேகரம்
யா / கைதடி முத்துக்குமாரசுவாமி
மகா வித்தியாலயம்.

மீள்பார்வை:
ஆத்மஜோதி
நா. முத்தையா அவர்கள்

விலை ரூபா 35/-

வெளியீடு:
சோதி வெளியீட்டு வாரியம்

Sumithra - J.
YEAR - 9
J/H/L/C

# சைவ நெறி

# ஆண்டு 9

## துரித மீட்டலுக்கான வினா விடை

ஆக்கம் ;
**க. சந்திரசேகரம்**
*யா/கைதடி முத்துக்குமாரசுவாமி*
*மகா வித்தியாலயம்*

*மீள்பார்வை :-*
**ஆத்மஜோதி**
**நா. முத்தையா அவர்கள்**

இரண்டாம் பதிப்பு :- ஆவணி 1996
பதிப்புரிமை.

## நுழைவாயில் . . . . .

- இவ் வினாவிடைப் புத்தகம் ஆண்டு 9 மாணவர்களுடைய பாடத்திட்டத்தைத் தழுவி ஆக்கப்பட்டுள்ளது.

- இவ் வினாவிடைப் புத்தகம் மாணவர்களது சமய அறிவை வளர்ப்பதோடு அவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது

- இவ் வினாவிடைப் புத்தகத்தைச் சிறந்த முறையில் பூர்த்தி செய்து வெளியிடத்தக்க வகையில் மீள்பார்வை செய்துதந்த ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களுக்கு எமது நன்றியறிதலை இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இவ் வினாவிடைப் புத்தகத்தில் பிழைகள் திருத்தங்கள் இருப்பின் கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலும் இவ்வாறான ஆக்கப் பணிகளைச் செய்ய ஊக்கமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆண்டு 8, ஆண்டு 10, ஆண்டு 11, சைவநெறி வினாவிடைப் புத்தகத்திற்கு ஆதரவு நல்கிய ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யா/கைதடி முத்துக்குமாரசாமி
மகாவித்தியாலயம், கைதடி.

க. சந்திரசேகரம்.

# சைவநெறி

## ஆண்டு - 9

## 1. எமது சமயம்

1. சைவ சமயிகள் எல்லாம் வல்ல பரம்பொருளை எவ்வாறு அழைக்கின்றனர்?
"சிவன்" என்று அழைக்கின்றனர்

2. பரம்பொருளின் ஆற்றலை எவ்வாறு போற்றுகிறார்கள்?
சக்தி, உமை என்று போற்றுகிறார்கள்.

3. சிவனை வேறு எவ்வாறு அழைப்பார்கள்?
பசுபதி, உருத்திரன், நடராசன் என அழைப்பார்கள்

4. சக்தியை வேறு எவ்வாறு அழைப்பார்கள்?
அம்பிகை, துர்க்கை, காளி என அழைப்பார்கள்

5. அருவுருவ வடிவம் எது?
சிவலிங்க வடிவமாகும்.

6. "இந்து" என்ற சொல் எவ்வாறு உருவாகியது?
சிந்து நதியின் "சிந்து" என்ற சொல்லிருந்து மருவியது

7. இந்துசமயம் வேறு எவ்வாறு அழைக்கப்பட்டது?
"சனாதன தர்மம்"; என்றும் "வைதிக சமயம்" என்றும் அழைக்கப்பட்டது?

8. சிந்து வெளியில் தொல்பொருளாராய்ச்சி நடாத்தியவர்கள் யார்?
சேர். ஜோன் மார்ஷல், சேர் அலெக்ஸார்ந்தர் கன்னிங்காம், சேர் வில்லியம் ஜோன்ஸ் ஆகியோர்.

9. தொல் பொருளாராய்ச்சியின்போது சிந்துவெளியில்கிடைத்த சிலைகளும், இலச்சினைகளும் எதனைக் குறிக்கிறது?
சிந்துவெளி மக்கள் சிவனையும், சக்தியையும் வழிபட்டனர் என்பதைக் குறிக்கும்.

10, சிவனின் மறுபெயரான பசுபதி என்பதன் பொருள்என்ன?
''பசு'' என்பது ஆன்மாக்களையும் ''பதி'' என்பது உயிர்களுக்கெல்லாம் தலைவனான இறைவனையும் குறிக்கும்.

11. இறைவனது ஐந்தொழிலைக் குறிக்கும் வடிவம் எது?
நடராஜர் வடிவமாகும்.

12. சிந்துவெளி நாகரிகம் எந்த யுகத்திற்கு முற்பட்டது?
வெண்கல யுகத்திற்கு முற்பட்டது.

13. இந்து சமயம்பற்றி தெளிவாக அறியத்தரும் நூல் எது?
வடமொழியிலமைந்த வேதங்கள் எனப்படும் நூல்கள்.

14. வேதங்கள் யாரால் யாருக்கு அருளிச்செய்யப்பட்டன?
இறைவனால் இருடிகளுக்கு

15. இந்துமதத்தின் பிரமாண நூல்கள் எது?
வேதமாகும்.

16, வேதத்தின் மறு பெயர்கள் எவை?
எழுதா மறை, சுருதி, எழுதாக்கிளவி,

17. ''அபௌருஷேய நூல்கள்'' எனப்படுவது எது?
வேதம்.

18. சைவ சமயத்தின் சிறப்பு நூல்கள் எவை?
சிவாகமங்கள் (சிவாகமங்கள் இருபத்தெட்டாகும்)

19. இருபத்தெட்டு சிவாகமங்களின் இரு பிரிவுகளுமெவை?
முதல் பத்தும் சிவாகமங்கள்.

20. ஆகமங்கள் யாரால் யாருக்கு அருளிச் செய்யப்பட்டன?
இறைவனால் அனுபூதிமான்களுக்கு

21 சிவாகமங்கள் எவற்றை விளக்குகின்றன?
கடவுள், உயிர், உலகு என்ற முப்பொருள்களின் இயல்பினையும் இறைவனே உணர்வதற்கு உதவும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களையும்விளக்குகின்றன

22. ''சிவம்'' என்னும் சொல்லின் பொருள் யாது?
செம்மை அளிப்பது, மங்களத்தை அளிப்பது எனப்பொருள் படும்.

23. திருமுறைகளை வேறு எவ்வாறு அழைப்பர்?
''தமிழ்வேதம்'' என அழைப்பர்.

## 2. தோத்திரங்கள்

1. தஞ்சைப் பெருங்கோயிலையும், பொலனறுவைச் சிவன் கோயிலையும் கட்டுவித்த மன்னன் யார்?
கி. பி. 10ம் நூற்றாண்டில் வாழ்ந்த அபயகுலசேகரன் என அழைக்கப்பட்ட இராஜராஜசோழன்.

2. நம்பியாண்டார்நம்பி படைத்த நிவேதனத்தை உண்ட பிள்ளையார் யார்?
பொல்லாப் பிள்ளையார் (பொள்ளாப் பிள்ளையர்)

3. பொல்லாப்பிள்ளையார் எனப் பெயர்வரக் காரணம் என்ன?
செதுக்காமல் (பொள்ளாமல்) தானாகத் தோன்றியதால் பொள்ளாப் பிள்ளையார் என அழைக்கப்பட்டார். இதுவே பொல்லாப் பிள்ளையார் என மருவியது.

4. இராஜராஜசோழன் நம்பியாண்டார் நம்பியிடம் விடுத்த வேண்டுகோள் என்ன?
மூவர் தேவாரங்களும் எங்கு இருக்கின்றன என்று பொல் லாப் பிள்ளையாரிடம் அறிந்து சொல்லுமாறு வேண்டினான்

5 மூவர் தேவாரங்களும் எங்கு இருப்பதாக நம்பிக்குப் பிள்ளை யார் தெரிவித்தார்?
தில்லைச்சிற்றம்பலத்திற்கு மேற்கே ஒரு அறையில் இருப்ப தாகத் தெரிவித்தார்.

6. பொல்லாப்பிள்ளையாரின் செய்தியைத் தில்லைவாழ் அந்த ணர்களுக்குத் தெரிவித்தபோது அவர்கள் கூறிய பதில் என்ன?
மூவரும் (சம்பந்தர், அப்பர், சுந்தரர்) வந்தால் மட்டுமே தேவார ஏடுகள் இருக்கும் அறை திறக்கும் என்றனர்

7. தில்லைவாழ் அந்தணரின் வேண்டுதலை நிறைவேற்ற மன்னன் கையாண்ட வழி என்ன?
தேவார முதலிகள் மூவரதும் உருவச் சிலைகளையும் திருப்பாடல்கள் இருக்கும் அறையின் முன்பாக எழுந்தருளச் செய்தான்.

8. அறையினுள் கறையானால் அரிக்கப்பட்ட ஏடுகளைப் பார்த்துச் சலிப்புற்ற மன்னனுக்கு கேட்ட ஒலி என்ன?
''வேந்தா! இக்காலத்திற்கு வேண்டுவன அழியாது வைத்தோம்'' என்ற ஒலி கேட்டது.

9. மூவர் தேவாரங்களையும் திருமுறைகளாக வகுத்தவர் யார் எத்தனை திருமுறைகளை வகுத்தார்?
நம்பியாண்டார்நம்பி ஏழு திருமுறைகளாக வகுத்தார். இவையே ''மூவர் தமிழ்'' என அழைக்கப்பட்டது.

10. ஏனைய அருட்பாக்கள் எத்தனை திருமுறைகளாக வகுக்கப்பட்டன?
8 முதல் 11ம் திருமுறைகளாக வகுக்கப்பட்டன.

11. பன்னிரண்டாவது திருமுறை எது?
சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணமாகும்.

12. தேவாரங்கட்கு பண் வகுத்தவர் யார்?
திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த பெண்ணாகும்.

13 திருமுறைகள் வகுக்கபபட்ட வரலாற்றை அறிய உதவும் நூல் எது?
உமாபதி சிவாச்சாரியாரது ''திருமுறை கண்ட புராணம்'' ஆகும்.

14. சம்பந்தர் தேவாரம் எத்தனை திருமுறைகளாகும்?
முதல் மூன்று திருமுறைகளாகும்.

15. அப்பர் தேவாரம் எத்தனை திருமுறை?
4 முதல் 6ம் திருமுறை வரையுள்ளதாகும்.

16. சுந்தரர் தேவாரம் எத்தனையாம் திருமுறை?
ஏழாம் திருமுறையாகும்.

17. தேவாரம் என்பதன் பொருள் என்ன?
(தேவ+ஆரம்) தெய்வத்திற்கு சூட்டப்படும் பாமாலை எனப் பொருள்படும்.

18. தாண்டகவேந்தர் என அழைக்கப்படும் நாயனார் யார்.
அப்பர்.

19 எட்டாந் திருமுறையில் அடங்குவன எவை?
மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகமும், திருக் கோவையுமாகும்.

20 திருக்கோவையாரைத் திருச்சிற்றம்பலக் கோவை என அழைக்கக் காரணம் என்ன?
திருச்சிற்றம்பலவனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டமையால் அப்படி அழைக்கப்பட்டது

21. ஒன்பதாந் திருமுறையில் அடங்குவன எவை?
திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும்

22. திருவிசைப்பாவைப் பாடியவர்கள் யார்?
சேந்தனார், திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், கண்ட ராதித்தர், புருடோத்தம நம்பி, பூந்தருத்திநம்பி, காட நம்பி, சேதிராயர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார் ஆகிய ஒன்பது பேராகும்.

23 திருப்பல்லாண்டைப் பாடியவர் யார்?
சேந்தனார்.

24 பத்தாந் திருமுறையில் அடங்குவன எவை?
திருமூலர் அருளிச் செய்த திருமந்திரமாகும்

25. திருமந்திரம் எத்தனை பாக்களைக் கொண்டது?
3 000 பாக்களைக் கொண்டது.

26. திருமந்திரத்தின் சாரம் எதுவாகும்?
அன்பேசிவம் என்பதாகும்

27. பதினோராம் திருமுறையில் அடங்குவன எவை?
நாற்பது தோத்திர நூல்களின் தொகுதியாகும்.

28. பதினோராந் திருமுறையில் அடங்கும் தோத்திர நூல்களைப் பாடியவர்கள் யார்?

1. திருவாலவாயுடையார் 2. காரைக்காலம்மையார்

3 ஐயடிகள்காடவர்கோன் 4. சேரமான்பெருமான் நாயனார் 5. நக்கீரதேவர் 5. இளம்பெருமானடிகள் 7 கல்லாடதேவர் 8 கபிலதேவர் 9 பரணதேவர் 10 அதிராவடிகள் 11. பட்டினத்தடிகள் 12. நம்பியாண்டார்நம்பி

29. பஞ்சதோத்திரங்கள் ஓதப்படும் ஒழுங்கு எதுவாகும்?
1. தேவாரம் 2. திருவாசகம் 3 திருவிசைப்பா
4. திருப்பல்லாண்டு 5 திருத்தொண்டர் புராணம்

30 எத்தனையாம் திருமுறை அடங்கல் முறை எனப்படும்?
1-7 திருமுறைகள்

## 3, சாத்திரங்கள்

1. சைவசித்தாந்த சாத்திர நூல்கள் எவைபற்றிக் கூறுகின்றன?
அடியார்கள் வாழ்ந்த நெறிபற்றிக் கூறுகின்றன.

2. சைவசித்தாந்த நூல்களை வேறு எவ்வாறு அழைப்பர்?
மெய்கண்ட சாத்திரங்கள் என அழைப்பர்

3. மெய்கண்டசாத்திர நூல்களின் நடுநாயகமாக விளங்கும் நூல் எது?
சிவஞானபோதம் என்னும் நூலாகும்.

4. சிவஞானபோதத்தை அருளிச் செய்தவர் யார்?
மெய்கண்டதேவர்

5. சித்தாந்தம் என்பதன் பொருள் என்ன?
"முடிந்த முடிபு" என்பதாகும்.

6. சைவசித்தாந்தம் கூறும் உண்மைப் பொருட்கள் மூன்றும் எவை?
இறைவன்- ஆன்மா, மலம் (பதி, பசு, பாசம்)

7. முத்தி என்றால் என்ன?
ஆன்மா மலத்தினின்று நீங்கி இறைவனை அடைந்து நித்தியமான பேரின்பப்பெருவாழ்வு எய்துதல்முத்தி எனப்படும்.

8. மெய்கண்ட சாத்திரங்கள் எத்தனை?
பதினான்கு.

9. காலத்தால் முந்தியதும், சித்தாந்த சாத்திர நூல்வரிசையில் முதலிடம் பெறுவதும் எந்நூல்கள்?
திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார்.

10. திருவுந்தியாரின் முடிவுச் சொற்றொடரான "உந்தீபற" என்பதன் பொருள் என்ன?
உமது தீமையெல்லாம் பறந்துவிடும் (உம்+தீ+பற) என்பதாகும்.

11. மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கையும் அவற்றின் ஆசிரியர்களையும் தருக?

| நூல்கள் | ஆசிரியர்கள் |
| --- | --- |
| 1 திருவுந்தியார் | - திருவியலூர் உய்யவந்ததேவர் |
| 2 திருக்களிற்றுப்படியார் | - திருக்கடவூர் உய்யவந்ததேவர் |
| 3. சிவஞானபோதம் | - மெய்கண்டதேவர் |
| 4 சிவஞானசித்தியார் | - } அருணந்திசிவாசாரியார் |
| 5 இருபாஇருபஃது | - |
| 6 உண்மை விளக்கம் | - திருவதிகை மனவாசகம் கடந்தார் |
| 7 சிவப்பிரகாசம் | உமாபதி சிவாசாரியார் |
| 8 திருவருட்பயன் | |
| 9. வினாவெண்பா | |
| 10. போற்றிப்பஃறொடை | |
| 11. கொடிக்கவி | உமாபதி சிவாசாரியார் (இந்த எட்டு நூல்களும் சித்தாந்த அட்டகம் என்றும் அழைக்கப்படும்) |
| 12. நெஞ்சுவிடுதூது | |
| 13. உண்மைநெறிவிளக்கம் | |
| 14. சங்கற்ப நிராகரணம் | |

12. திருக்களிற்றுப்படியார் எனப் பெயர் வரக் காரணம் யாது?
திருக்கடவூர் உய்யவந்ததேவனார் 100 பாடல்களைப்பாடி கனகசபையின் திருப்படிகளில் வைத்தபோது கல்யானை துதிக்கையை நீட்டி நூலை எடுத்து இறைவன் திருமுன் வைத்ததனால் திருக்களிற்றுப் பாடியார் எனப் பெயர் வந்தது.

## 1, சமய தத்துவங்கள்

1 சடப்பொருள் என்றால் என்ன?
உணர்வில்லாத பொருள்கள் சடப்பொருட்கள் எனப்படும்
(உ-ம் மண், கல்லு, உயிரற்ற உடல்)

2. உயிர்ப் பொருட்கள் சில கூறுக
மரம், விலங்கு, மனிதன், செடி, கொடி.

3. ஐம்பொறிகள் எவை?
மெய் வாய், கண், மூக்கு. செவி.

4. ஐம்புலன்கள் எவை?
ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை.

5. பகுத்தறிவு படைத்தவர்கள் யார்?
மனிதர்

6 நாம் ஏன் மூற்றறிவு அற்றவர்கள்?
அறிவிக்கவே அறியும் தன்மையுடையதால்

7. பாசத்தின் மறுபெயர்கள் எவை?
தளை, கட்டு, மலம் என்பன

8. பசுவின் மறு பெயர்கள் எவை?
ஆன்மா, உயிர், சீவன், சீவான்மா

9. பதியின் மறுபெயர்கள் எவை?
இறை, கடவுள், சிவம், முதல்வன், பரமசிவன்

10 அநாதியான முப்பொருட்களும் எவை?
பதி, பசு, பாசம் என்பன

## 5. பதி

1. பதியின் தன்மை என்ன?
பசுக்களுக்கும், பாசங்களுக்கும் தலைமை பூண்டிருத்தலாகும்

2. பதி தானே தனித்து நிற்கும் நிலையில் நோக்குவது எவ்வாறு அழைக்கப்படும்?
சொரூப இலக்கணம் எனப்படும்

3. பதியை உலகுயிர்களின் சார்பில் வைத்து நோக்குவது எவ்வாறு அழைக்கப்படும்?
தடத்த இலக்கணம் எனப்படும்

4. பதியின் சொரூப இலக்கணம் எத்தன்மையுடையது?
வாக்குக்கு எட்டாதது

5. பதியின் தடத்த இலக்கணம் எத்தன்மையுடையது?
உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு சொரூப நிலையிலிருந்து படியிறங்கி உலகுயிர்களோடு தொடர்பு கொண்டிருக்கும் நிலை தடத்த நிலையின் தன்மையாகும்.

6. பதிக்கு குணங்குறிகள் பேசப்படும் நிலை எது?
தடத்த நிலையாகும்

7. ஐந்தொழில்கள் எவை?
படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன

8. படைத்தல் என்றால் என்ன?
உயிர்களுக்கு தனு, கரண, புவன, போகம் என்பவற்றை மாயையிலிருந்து தோற்றுவித்தலாகும்

9. தனு என்றால் என்ன?
உடம்பு

10. கரணம் என்றால் என்ன?
மனம் முதலிய கருவிகள்

11. புவனம் என்றால் என்ன?
உடம்புக்கு ஆதாரமாகிய உலகம்

12. போகம் என்றால் என்ன?
அனுபவிக்கப்படும் பொருட்களாகும்

13. காத்தல் என்றால் என்ன?
தோற்றுவிக்கப்பட்ட தனு, கரண, புவன போகங்களை நிலைநிறுத்தல் காத்தலாகும்

14. மறைத்தல் என்றால் என்ன?
உயிர்களை இருவினைப்பயன்களாகிய இன்ப துன்பங்களில் அமிழ்த்துதல் மறைத்தல் எனப்படும்

15. அருளல் என்றால் என்ன?
உயிர்களுக்குப் பாசத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதல் அருளல் எனப்படும்

16. அழித்தல் என்றால் என்ன?
தனு, கரண, புவன, போகங்களை முதற் காரணத்திலே ஒடுக்குதல் அழித்தலாகும்

17. இறைவனின் மூன்று திருமேனிகளுமெவை?
அருவம், உருவம், அருவுருவம் என்பன

18. அருவத் திருமேனியுடையபோது இறைவன் எவ்வாறு அழைக்கப்படுகிறான்?
சிவன் என அழைக்கப்படுவான்

19. உருவத் திருமேனியின்போது இறைவன் எவ்வாறு அழைக்கப்படுவான்?
மகேசுவரன் என அழைக்கப்படுவான்

20. அருவுருவத் திருமேனியின்போது இறைவன் எவ்வாறு அழைக்கப்படுவான்?
சதாசிவன் என அழைக்கப்படுவான்

21. இறைவனின் எண் குணங்கள் எவை?
1. முற்றுமுணர்தல் 2. என்றும் அறிதல்
3. இயற்கை உணர்வினனாதல்
4 வரம்பில் இன்பமுடையவர்
5. தன்வயத்தனாதல் 6. முடிவிலாற்றலுடைமை
7. பேரருளுடைமை 8. தூயவுடம்பினனாதல்

22. ''சச்சிதானந்தம்'' என்பதன் பொருள் என்ன?
சத் (உள்பொருள்) சித் (அறிவுடைய பொருள்) ஆனந்தம் (இன்பமான பொருள்) என்பதாகும்

23. இறைவனின் பெயர்களும் சத்தியின் பெயர்களும் எவை?
1. பரமசிவன் — பராசக்தி
2. சதாசிவன் — மனோன்மணி
3. மகேசுவரன் — மகேசுவரி
4. உருத்திரன் — உமை
5. விட்டுணு — இலக்குமி
6. பிரம்மா — சரஸ்வதி

## 6, பசு

1. பசு என்னும் சொல்லின் பொருள் யாது?
பாசத்தால் கட்டுண்டது எனப் பொருள்படும்

2. மூலமலம் எனப்படுவது எது?
ஆணவமாகும்

3. ஆணவம் என்பதன் பொருள் என்ன?
உயிரைச் சிற்றறிவும், சிறுதொழிலுமாக்குதல் என்பதாகும்

4. இறைவனின் உயிர்களுக்குப் பிறவியைக் கொடுக்கும் நோக்கம் என்ன?
உயிர்களிலிருந்த ஆணவ மலத்தை நீக்குவதாகும்

5. உயிர்கள் செய்யும் வினை எவ்வாறு அழைக்கப்படும்?
கன்மம் எனப்படும்

6. இரு வினைகளுமெவை?
நல்வினை, தீவினை என்பனவாகும்

7. ஆணவத்திற்கு அடங்கிச் செய்யும் வினை எவ்வாறுஅழைக் கப்படும்?
தீவினை எனப்படும்

8. ஆணவத்தை அடக்கிச் செய்யும் வினை எவ்வாறு அழைக் கப்படும்?
நல்வினை எனப்படும்

9. உயிரை இறைவனோடு சேரவிடாது தடுத்து நிற்பன எவை?
   1. உயிரை மயக்கி தீய வழியில் செலுத்தும் ஆணவம்
   2. ஆணவத்தால் உயிர்கள் செய்யும் கன்மம்
   3. கன்மத்தை செய்ய கருவியாக இருக்கும் உடப்பு ஆகியவையாகும்.

10. உயிரறிவு கூடியும், சடப்பண்பு குறைந்தும் செல்லும் தன்மை கொண்டவர்கள் யார்?
முனிவர், தேவர், போன்றோர்

11. விலங்குப்பண்பு பாதியும், தெய்வப்பண்பு பாதியும் கலந்த உயிர் எடுத்த பிறவி எது?
மனிதப்பிறவி

12. உயிர் ஏன் சதசத்து எனப்படுகிறது?
ஆணவத்தோடு சேர்ந்து நிற்கும்போது அசத்தாகவும், சிவத்தோடு சார்ந்து நிற்கும்போது சத்தாகவும் சார்ந்ததன் வண்ணமாக இருப்பதால் சதசத்து எனப்படுகிறது

13. மூவகை ஆன்மாக்களும் எவை?
சகலர், பிரளயாகலர், விஞ்ஞானாகலர்

## 7, பாசம்

1. பாசம் என்ற வடமொழிச் சொல்லைத் தமிழில் எவ்வாறு அழைப்பர்?
''கட்டு'' அல்லது ''தளை'' எனப் பொருள்படும்

2 பாசத்திற்கு மலம் எனப்பெயர் வரக் காரணம் யாது?
உயிரை மாசுபடுத்துவதால் மலம் எனப்படும்

3. மலங்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
மூன்று வகைப்படும் (மும்மலங்கள்)
1. ஆணவம் 2. கன்மம் 3. மாயை

4. மும்மலங்களின் தன்மை எத்தகையது?
அறிவில்லாத சடப்பொருட்களாகும்

### ஆணவம்:

5. ஆணவம் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
இருள் மலம், சகசமலம், மூலமலம்

6. ஆணவத்தினால் எம்மிடையே உண்டாகும் தன்மை எது வாகும்?
நான் என்ற ''அகந்தையும்'' எனது என்ற ''மமதையும்' ஆகும்.

7. ஆணவமலத்தினால் உயிர்களிடத்தில் ஏற்படும் தீய குணங்கள் எவை?
காமம், வெகுளி, மயக்கம், கொடுமை

8. ஆணவத்தை வெல்வதற்கு உயிர்களுக்குத் துணையாக நிற்பது எது?
இறைவனின் திருவருளாகும்

9. உயிரிலிருந்து ஆணவம் எப்போது முற்றாக ஒழியும்?
உயிரானது இறைவனைப்பற்றி நிற்கும் முத்தி நிலையிலேயே ஆணவம் ஒழியும்

கன்மம் :-

10. கன்மம் என்றால் என்ன?
உயிர்கள் உடம்பைக் கொண்டு செய்யும் செயல்கள் கன்மம் (நல்வினை, தீவினை) எனப்படும்

11, இறைவனுக்கும் மெய்யடியார்களுக்கும் செய்யும் தொண்டு எவ்வாறு அழைக்கப்படும்?
சிவநல்வினை அல்லது சிவபுண்ணியம் எனப்படும்

12. உயிர்களுக்குச்செய்யும் நல்வினை எவ்வாறு அழைக்கப்படும்?
பசு நல்வினை அல்லது பசு புண்ணியம் எனப்படும்

13. தீவினையின் குணங்கள் எவை?
ஆசை, கோபம், பொறாமை, செருக்கு, அநீதி. கொடுமை

14. சிவசம்பந்தமாகச் செய்யப்படும் தீவினைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
சிவத்தீவினை அல்லது சிவத்துரோகம் எனப்படும்

15. உயிர்கள் சம்பந்தமாகச் செய்யப்படும் தீவினைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
பசுத்தீவினை அல்லது பசுத்துரோகம் எனப்படும்

16. வினை செய்யப்படும் மூன்று வழிகளுமெவை?
மனம், மொழி. மெய் என்பவையாகும்

17 நல்வினை, தீவினையில் சேராத வேறு வினைகள் சில கூறுக?
உணவு சமைத்தல், ஓவியம் வரைதல், ஆடை நெசவுசெய்தல் போன்றன வெறு வினைகளாகும்

18. நல்வினைப்பயனை எவ்வாறு சொல்வர்?
புண்ணியம் என்பர்

19. தீவினைப்பயனை எவ்வாறு சொல்வர்?
பாவம் என்பர்

20. பிராரத்தம் என்றால் என்ன?
பழைய வினைத்தொகுதியில் நாம் இப்பிறப்பில் அனுப விப்பது பிராரத்தம் எனப்படும்

21. ஆகாமியம் என்றால் என்ன?
நாம் இப்பிறவியிலே செய்யும் புண்ணிய பாவங்கள் ஆகா மியம் எனப்படும்

22. சஞ்சிதம் என்றால் என்ன?
பழைய வினைத் தொகுதியில் அனுபவித்து முடிந்து எஞ்சி யிருப்பது சஞ்சிதம் எனப்படும்

23. ஊழ் (விதி) என்றால் என்ன?
முதிர்ந்தது, பக்குவப்பட்டது என்பது பொருளாகும்

**மாயை:—**

24. தனு, கரணம் முதலியவற்றின் தோற்றத்திற்கு முதற் காரணமாய் இருந்தது எது?
மாயை

25. ஒரு காரியம் ஆவதற்குத் தேவையான மூன்று காரணங் களும் எவை?
(1) முதற்காரணம் (2) துணைக்காரணம் (3) நிமித்த காரணம்

26. உலகம் உண்டாவதற்கு முதற்காரணமாக இருந்தது எது? துணைக்காரணம் எது? நிமித்த காரணம் எது?
1. முதற்காரணம் - மாயை, துணைக்காரணம் - சிவசக்தி நிமித்தகாரணம் - இறைவன்

27. நாம் காணும் இந்தப் பிரபஞ்சம் எதிலிருந்து தோன்றிறது? மாயையிலிருந்து தோன்றியது

# 8. நடராசரும் தட்சிணாமூர்த்தியும்

## அ. நடராசப் பெருமான்:—

1. இறைவனின் நடராசர் வடிவத்தை எந்தக் கோயில்களில் காணலாம்?
சிவன்கோயில்களில் காணலாம்

2. தில்லைச்சிற்றம்பலத்தில் நடராசப்பெருமான் ஆடும் திருக் கூத்தை எவ்வாறு அழைப்பர்?
பஞ்சகிருத்திய நடனம் என அழைப்பர்
(பஞ்சகிருத்தியம் - ஐந்தொழில்)

3. இறைவனின் நடராசர் வடிவத்தில் ஐந்தொழிலைக் குறிக் கும் நிலைகள் எவை?
   1. உடுக்கை ஏந்திய கை — படைத்தல்
   2. அமைந்த திருக்கை — காத்தல்
   3. தீ ஏந்திய திருக்கை — அழித்தல்
   4. முயலகன்மீது ஊன்றிய திருவடி — மறைத்தல்
   5. தூக்கிய திருவடி — அருளல்

## தென்முகக் கடவுள்:—

4. இறைவன் எங்கே தெற்கு நோக்கி இருந்தார்?
திருக்கைலாய மலையிலேயுள்ள ஒரு கல்லால் மரநிழலில் தெற்கு நோக்கி இருந்தார்

5. பிரம்மாவின் புத்திரர்கள் யார்?
சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர்

6 கல்லால மரநிழலில் இறைவன் பிரமாவின் புத்திரர் களுக்கு விளக்கியது எவை?
சரியை, கிரியை, யோகம் என்பனவாகும்

7. ஞானமார்க்கம் எத்தன்மையது?
ஞானம் நாவினால் நவிலற் பாலதன்று

8. கல்லால மரநிழலில் இருந்த இறைவன் சின் முத்திரை எவ்வாறு காட்டினார்?
சுட்டுவிரலையும் பெருவிரலையும் ஒன்று சேர்த்து ஏனைய மூன்று விரல்களையும் தனித்து றுத்தி சின் முத்திரை காட் டினார்.

9. சின் முத்திரை காட்டப்பட்ட விரல்கள் ஒவ்வொன்றும் எவற்றைக் குறிக்கின்றது?
பெருவிரல் - இறைவனைக் குறிக்கும் சுட்டுவிரல் - ஆன்மா வைக் குறிக்கும் ஏனைய விரல்கள்:- மும்மலங்களைக் குறிக்கும்

10. சின் முத்திரையின் பொருள் என்ன?
பாசத்திலிருந்து ஆன்மா விடுதலை பெறவேண்டுமாயின் பதியோடு சேரவேண்டும் என்பதாகும்

11. தென்முகக் கடவுள் எனப் பெயர்வரக் காரணம் என்ன?
கல்லால மர நிழலில் தெற்கு நோக்கி இருந்தமையால் தென்முகக் கடவுள் என்பர்

12. தென்முகக் கடவுளை வேறு எவ்வாறு அழைப்பர்?
தட்சிணமூர்த்தி என அழைப்பர் தட்சிணம் - தெற்கு,மூர்த்தி - கடவுள்

# 9. இந்து இல்லம்

1. இந்து இல்லம் ஒன்றின் வாசலில் காணப்படுபவை எவை?
படலைக்கு வேயப்பட்ட கூரை, அதன் கீழ் திண்ணையும் சுமைதாங்கியும் கால் நடைகள் தாகந் தீர்ப்பதற்கான தண்ணீர் தொட்டி என்பனவும் காணப்படும்.

2. ஒரு இந்து இல்லத்தின் வீட்டில் காணப்படும் படங்கள் எவை?
செல்வம் வழங்கும் திருமகளின் படம்; விக்கினம் தீர்க்கும் விநாயகனின் படம் இனிமை, இளமைத் தெய்வமாகிய முருகனின் படம் என்பன

3. இல்லத்தின் வழிபாட்டறையில் இருக்கும் படங்களின் முன்னால் காணப்படுவன எவை?
விபூதி, சந்தனம், குங்குமம், விளக்கு

4. இந்து இல்லத்தின் முக்கிய கடமை என்ன?
விருந்தோம்பலாகும்

5. ஒரு குடும்பத்திற்கு தலைவனாக இருப்பவர் யார்?
கணவன்

6, மனைவி எதைத் தன் தெய்வீக வழிபாடாகக் கருதுவாள்?
கணவனின் குறிப்பறிந்து நடத்தலை

7. பக்தி பயில்வதற்கான களன் என அழைக்கப்படுவது எது?
இந்துவின் இல்லமாகும்

8. பண்டைக் காலத்தில் எதைக்கொண்டு மனிதனின் செல்வத்தை மதிப்பிடுவார்கள்?
அவர்களின் கால்நடையைக் கொண்டு மதிப்பிடுவார்கள்

9. இந்துக்கள் புனிதமாகப் போற்றும் மிருகம் எது?
பசு

10. பசுவதைக்கு அஞ்சி நாட்டை விட்டோடிய பெரியார் யார்?
ஞானப்பிரகாசமுனிவர்.

11. கால்நடைகளைச் செல்வமென்று மதித்து அதன் தெய்வத் தன்மையை போற்றும் பட்டிப்பொங்கல் எப்போ நடைபெறும்?
தைப்பொங்கலிற்கு அடுத்தநாள்

## 10. சைவ நாற்பாதங்கள்

1. சைவ நாற்பாதங்கள் எவை?
சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன.

2. நாற்பாதங்கள் என்றால் என்ன?
எமது அக வாழ்வையும், புறவாழ்வையும் நெறிப்படுத்தி நாம இறைவனை அடைய உதவும் நான்கு வழிகளாகும்

3. சரியை என்றால் என்ன?
எமது மனம், மொழி, மெய் ஆகியவற்றால் தொண்டு செய்தலாகும்

4. சரியை வழி நின்று முத்தியடைந்த நாயனார் யார்?
திருநாவுக்கரசர்

5. சரிலய நெறியை வேறு எவ்வாறு அழைப்பர்?
''தாச மார்க்கம்'' என அழைப்பர்

6. சரியை மார்க்கத்தினால் ஏற்படும் பயன்யாது?
ஆணவத் தடிப்பைக் குறைக்கும்

7. கிரியை என்றால் என்ன?
விதிப்படி செய்யப்படும் பூசைகள் கிரியை முறை எனப்படும்

8. கிரியை மார்க்கத்தை வேறு எவ்வாறு அழைப்பர்?
''சற்புத்திர மார்க்கம்'' என அழைப்பர்,

9. கிரியை வழியில் முத்தியடைந்த நாயன்மார் யார்?
திருஞானசம்பந்தர், பூசலார் நாயனார், சண்டேஸ்வர நாயனார் ஆகியோர்.

10. நான் என்ற அகங்காரத்தையும் எனது என்ற மமகாரத்தையும் தகர்த்தெறியும் நெறி எது?
கிரியை நெறியாகும்.

11. யோக மார்க்கம் என்றால் என்ன?
இறைவனைத் தோழனாகக் கொண்டு பக்தி செய்யும் நெறி யோக மார்க்கமாகும்.

12. யோக மார்க்கம் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
''சக மார்க்கம்'' என அழைக்கப்படும்

13. யோகம் என்பதற்குக் கூறப்படும் விளக்கம் என்ன?
ஆன்மா இறைவனோடு சேர்தல் என்பதால் ''சேர்க்கை'' எனப்படும்.

14. யோகம் எத்தனை அங்கங்களையுடையது? அவை எவை?
எட்டு அங்கங்களையுடையது. அவையாவன:

1. இயமம் — தீயனவற்றை விலக்கல்
2. நியமம் தற்காரியங்களைச் செய்தல்
3. ஆசனம் — அமரும் நிலை
4. பிராணாயாமம் — மூச்சை அடக்குதல்
5. பிரத்தியாகாரம் — புலன்களையும் மனத்தையும், உலகியலில் செல்லவிடாது செலுத்தல்
6. தாரணை — மனத்தைக் கடவுள் பாற்செலுத்தல்
7. தியானம் — மனத்தை இறை நினைவில் நிறுத்தல்
8. சமாதி — ஆன்மீக அனுபவம் இறை நிலையில் [ஒன்றல்.

15. இயமம் கொண்டுள்ள பத்துக் குணங்கள் எவை?
அகிம்சை, சத்தியம், நேர்மை, இரக்கம், பரிவு, ஆன்ம சுத்தி, பொறுமை, தைரியம், கடமையில் ஈடுபாடு உடற், சுத்தி என்பனவாகும்

16. சத்தியத்தின் பிற பெயர்கள் எவை?

1 உண்மை — உள்ளத்தில் உள்ளுவது உண்மை.
2. வாய்மை — வாயாற் கூறப்படுவது வாய்மை.
3. மெய்ம்மை மெய்யாற் செய்யப்படுவது மெய்ம்மை.

17. அகிம்சை என்பதன் கருத்து என்ன?
ஒருவருக்கும் ஊறு செய்யாமை என்பதாகும்.

18. அன்பினால் உண்டாகும் குணங்கள் எவை?
பொறுமை, தைரியம், இரக்கம், பரிவு என்பன.

19. நியமம் என்றால் என்ன?
நற்பழக்கங்களைப் பேணி வளர்த்தலாகும்.

20. யோக மார்க்கத்தில் முத்தியடைந்த நாயனார் யார்?
சுந்தரமூர்த்தி நாயனார்.

21 ஒருவனை ஞான மார்க்கத்திற்குக் கொண்டு வருவன எவை?
சரியை, கிரியை யோகம், ஞானம் என்பனவாகும்

22. ஞானத்தைக் கனி என்றால் சரியை, கிரியை, யோகம் என்பன எவையாகும்?
முறையே அரும்பு, மலர், காய் என்பனவாகும்

23 ஞானத்தை வள்ளுவர் எவ்வாறு கூறுகிறார்?
''மெய்யுணர்வு'' எனக் கூறுகிறார்

24. ஞான மார்க்கம் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
''சன்மார்க்கம்'' என அழைக்கப்படும்.

25. ஞானத்தைப் பெறுவதற்குரிய வழியென்ன?
''ஞானபூசனை''யாகும்

26 ஞானபூசனை என்றால் என்ன?
(1) ஞானநூல்களை ஒருவர் படித்தல் (2) தாம் படித்தவற்றை மற்றவர்களுக்குப் படிப்பித்தல் (3) மெய்ப்பொருளை ஞானாசாரியாரிடம் கேட்டல் (4) தாம் கேட்ட பொருளைப் பக்குவமுடையோர்க்குச் சொல்லுதல் (5) அந்த மெய்ப்பொருளைப்பற்றிச் சிந்தித்தல் என்பனவாகும்

27. ஞான மார்க்கத்தில் முத்தியடைந்த நாயனார் யார்?
மாணிக்கவாசகர்

28. முத்தி நிலை என்றால் என்ன?
பந்தம் அகன்ற நிலை முத்தி நிலையாகும்

29. முத்தி பெற்றவர் உடம்போடு கூடியிருக்கும் போது எவ்வாறு அழைக்கப்படுவர்?
''சிவன்முத்தர்'' என அழைக்கப்படுவர்

30. சரியை மார்க்கமாகப் பெற்ற முத்தி எவ்வாறு அழைக்கப்படும்?
சாலோக முத்தி என அழைக்கப்படும்

31. கிரியை மார்க்கமாகப் பெற்ற முத்தி எவ்வாறு அழைக்கப் படும்?
சமீப முத்தி என அழைக்கப்படும்

32. யோகமார்க்கமாகப் பெற்ற முத்தி எவ்வாறு அழைக்கப் படும்?
சாரூப முத்தி என அழைக்கப்படும்

33. ஞான மார்க்கமாகப்பெற்ற முத்தி எவ்வாறு அழைக்கப்படும்?
சாயுச்சிய முத்தி என அழைக்கப்படும்

## 11. சக்தி வழிபாடு

1. சக்தியை வழிபடும் சமயம் எது?
சாக்த சமயம்

2. தாய் எப்படியான தன்மை கொண்டவள்?
அன்பு, தூய்மை, பொறுமை, தன்னலமின்மை, மன்னிக்கும் சுபாவம் கொண்டவள்

3. சக்தி வழிபாடு என்றால் என்ன?
இறைவனின் திருவருளைத் தாயாக வழிபடுதலே சக்தி வழிபாடாகும்

4. "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ" என்று இறைவனைப் பாடியவர் யார்?
மாணிக்கவாசகர்

5. உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குபவள் யார்?
அன்னை பராசக்தி

6. சக்தியை வேறு எந்த வடிவங்களில் வணங்குகிறோம்?
வீரத்தைத் தரும் துர்க்கையாகவும் கல்வியைத் தரும் கலைமகளாகவும் செல்வத்தைத் தரும் திருமகளாகவும் வழிபடுகின்றோம்.

7. அன்னை பராசக்திக்கு வழங்கும் ஏனைய பெயர்கள்எவை?
அம்பிகை, அம்பாள், பவானி, உமை, சமுண்டி, பகவதி, காளி. உருத்திராணி என்பன

8. சக்தியை வணங்கும் சாக்தர்கள் எந்த நாட்டில் இன்று கூடுதலாகக் காணப்படுகிறார்கள்?
வங்காள தேசத்தில்

9. சக்தி வழிபாட்டிற்கு இந்தியாவின் பிரசித்திபெற்ற தலங்கள் எவை?
மதுரை மீனாட்சி, காஞ்சிக் காமாட்சி, காசி விசாலாட்சி, கன்னியாகுமரி பகவதி – அம்மன் கோவில்கள்

19. இலங்கையில் பிரசித்திபெற்ற அம்மன் கோயில்கள் எவை?
யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் கோயில், நயினை நாகபூசணி அம்மன் கோயில், திருகோணமலைப் பத்திர காளி கோயில், மாத்தளை முத்துமாரி அம்மன் கோயில் என்பன

11. சக்தி விரதங்கள் எவை?
வரலட்சுமி விரதம், கேதார கௌரி விரதம், நவராத்திரி விரதம்

12. கேதார கௌரி விரதம் என்றால் என்ன?
சிவமின்றிச் சக்தியில்லை, சக்தியின்றிச் சிவமில்லைஎன்பதை விளக்கச் சிவனையும் பார்வதியையும் அர்த்த நாரீசுவரர் வடிவத்தில் போற்றி வழிபடுதல் கேதார கௌரி விரதமாகும்.

13. கேதார கௌரி விரதம் எப்போது அனுட்டிக்கப்படும்?
புரட்டாதி மாத சுக்கில பட்சத்துத் தசமி தொடங்கி ஐப்பசி மாத கிருஷ்ண பட்சத் தீபாவலி அமாவாசை வரையுள்ள 21 நாட்களும் அனுட்டிக்கப்படும்

14. சக்தி விரதங்களிலே தலைசிறந்த விரதமாகப் போற்றப் படுவது எது?
நவராத்திரி விரதமாகும்

15. நவராத்திரி விரதம் எப்போது அனுட்டிக்கப்படும்?
புரட்டாதி மாதத்து வளர்பிறைப் பிரதமை முதல் நவமி வரையுள்ள 9 நாட்கள் அனுட்டிக்கப்படும்

16. நவராத்திரியைத் தொடர்ந்து வரும் பத்தாம் நாள் எவ்வாறு அழைக்கப்படும்?
விஜயதசமி என அழைக்கப்படும்

17 வட இந்தியாவில் இவ்விழாவை எவ்வாறு அழைப்பார்கள்?
''தசாரா'' என அழைப்பர்

18 நவராத்திரிக் காலங்களில் யாரை வழிபடுவர்?
முதல் மூன்று தினங்களும் துர்க்கையையும், அடுத்துமூன்று தினங்களும் இலக்குமியையும், கடைசி மூன்று தினங்களும் சரஸ்வதியையும் வழிபடுவர்

19. நவராத்திரிக் காலங்களில் பாராயணம் பண்ணப்படும் பாடல்கள் எவை?
லலிதா சகஸ்ரநாமம், சகலகலாவல்லி மாலை, அபிராமி அந்தாதி, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் ஆகியவை.

20. சரஸ்வதியின் மறு பெயர்கள் எவை?
நாமகள், கலைமகள், கலைவாணி

21. இலக்குமியின் மறு பெயர்கள் எவை?
திருமகள்

22. துர்க்கையின் மறு பெயர்கள் எவை?
மலைமகள்

23. விஜயதசமியன்று ஆலயங்களில் நடைபெறும் விழா எது?
''மானம்பூ'' (மகாநோன்பு)

24. மானம்பூ அன்று வாழை வெட்டுதல் எதைக் குறிக்கும்?
மகுடாசுரன் எனும் அசுரனைத் தேவி சங்கரித்த நிகழ்வைக் குறிக்கும்

25. மகுடாசுர சங்காரம் எதைக் குறிக்கும்?
ஆன்மாக்களைப் பீடித்துக் கொழுத்துவரும் ஆணவம் அறியாமை, மிருகத்தன்மை ஆகியவற்றை அழித்து ஆன்மாவை இறைவனோடு சேர்த்தலைக் குறிக்கும்

26. பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் முடித்து தாங்கள் வன்னி மரத்தில் விட்டுப்போன ஆயுதங்களை எடுத்துப் பூசை செய்த நாள் எதுவாகும்?
விஜயதசமியாகும்

## 12, நந்தியை விலகச்செய்த நந்தனார்

1. நந்தனார் எங்கே பிறந்தார்?
தென் இந்தியாவில் உள்ள ஆதனூரில் பிறந்தார்

2. நந்தனாரை வேறு எவ்வாறு அழைப்பர்?
திருநாளைப் போவார் என அழைப்பர்

3. நந்தனார் எந்தக் குலத்தைச் சேர்ந்தவர்?
புலையர் குலத்தைச் சேர்ந்தவர்

4. நந்தனார் செய்த தொண்டு எதுவாகும்?
கோவில் வாத்தியங்களுக்கு வேண்டிய வார், தோல், நரம்பு போன்றவற்றையும், பூசைக்கு வேண்டிய வாசனைத் திரவியங்களில் ஒன்றாகிய கோரோசனையையும் கொடுத்து வந்தார்.

5. நந்தனாருக்கு இறைவன் நிகழ்த்திய அற்புதம் என்ன?
மூலஸ்தானத்தை வணங்க இடைஞ்சலாக இருந்த நந்தியை விலகச் செய்தார்.

6. நந்தனாருக்கு நந்தி விலகிய தலம் எது?
திருப்புன்கூர்

7. திருப்புன்கூர் தலத்தில் நந்தனார் செய்த தொண்டுஎன்ன?
குளம் ஒன்றை வெட்டினார்

8 நந்தனார் போக ஆசைப்பட்ட தலம் எது?
சிதம்பரம்

9. சிதம்பர எல்லையில் உறங்கிய நந்தனாருக்கு இறைவன் கனவில் கூறியது என்ன?
''தில்லைமூவாயிரரைத் தீ வளர்க்கப்பணித்துள்ளேன் அதில் மூழ்கி எழுந்தாற் புதிய வடிவம் பெறுவாய்'' எனக்கூறினார்.

10 இறைவன் தில்லை மூவாயிரர்க்குக் கனவில் கூறியது யாது?
தமது பக்தன் ஒருவன் ஊருக்கு வெளியே படுத்திருக்கிறான். நந்தன் எனப் பெயரினன் நம்மைக் காண வந்துள்ளான். அவன் மூழ்கத் தீ வளர்ப்பீர் அவனை நம்மிடம் அழைத்து வருவீர் என்றார்.

11. திருநாளைப் போவார் பெற்ற அருளைச் சுந்தரர்எவ்வாறு பெருமையாகக் கூறுகின்றார்
''செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன் என்று திருத்தொண்டத்தொகையிலே பெருமைபட கூறுகின்றார்.

## 13. நடமாடும் நம்பனுக்கொரு மீன்

1. அதிபத்த நாயனார் எங்கே பிறந்தார்?
சோழ நாட்டிலுள்ள நாகபட்டினத்தில் உள்ள நுளைய பாடி என்ற ஊரிலே பிறந்தார்

2. அதிபத்த நாயனார் எக்குலத்தைச் சேர்ந்தவர்?
பரவ குலத்தைச் சேர்ந்தவர்

3. அதிபத்தர் செய்த தொழில் என்ன?
மீன்பிடித் தொழில்

4. அதிபத்தர் இறைவனைத் தினமும் நினைத்து என்ன செய்தார்?
தான் பிடிக்கும் மீனில் நல்லதான ஒரு மீனை இறைவனுக்காகக் கடலில் விட்டார்

5. அதிபத்தரின் உறுதியைப் பரிசோதிக்க இறைவன் என்ன செய்தார்?
தினமும் ஒரு மீன்மட்டுமே கிடைக்கும்படியாகச் செய்தார்.

6. தானும் தன்குலமும் பட்டினியால் வாடியபோது கிடைத்த தங்க மீனை அதிபத்தர் என்ன செய்தார்?
இறைவனுக்காகக் கடலில் விட்டார்

7. பொன்மீனை அதிபத்தர் கடலில் விட்டபோது இறைவன் என்ன செய்தார்?
இடபாரூடராகக் காட்சி கொடுத்து அருள் புரிந்தார்.

## 14. அப்பாலும் அடிச்சார்ந்தார்

1. அப்பாலும் அடிசார்ந்தார் எனச் சேக்கிழார் யாரைக் குறிப்பிடுகின்றார்?
திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடப்படுகின்ற தனியடியார்கள் காலத்திலும் அதற்கு முந்திய பிந்திய காலத்திலும் தமிழ்நாட்டிற்கு அப்பாலும் இறைவழி நின்று பரகதி அடைந்தவர்களை அப்பாலும் அடிசார்ந்தார் எனச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

2. திருத்தொண்டர் புராணத்தை இயற்றியவர் யார்?
சேக்கிழார் பெருமான்

## சுவாமி விவேகானந்தர்

3. 1893-ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 11-ஆம் திகதி அமெரிக்காவில் சிக்காகோ நகரில் நடைபெற்ற சர்வமத மகாநாட்டில் கலந்து கொள்ள இந்தியாவிலிருந்து இந்து மதப் பிரதிநிதியாகச் சென்றவர் யார்?
சுவாமி விவேகானந்தர்

4. சுவாமி விவேகானந்தர் யாருடைய சீடராவர்?
இராமகிருஷ்ண பரமஹம்சர்

5. விவேகானந்தர் எப்போது பிறந்தார்?
1863ஆம் ஆண்டு சனவரி மாதம் 12-ஆம் திகதி பிறந்தார்

6 விவேகானந்தரின் பெற்றோர் யார்?
தந்தை:- விசுவநாததத்தர், தாய்:- புவனேசுவரி

7. விவேகானந்தரின் இயற்பெயரென்ன?
நரேந்திரன்

8. இராமகிருஷ்ணபரமஹம்சரைச் சந்தித்த நரேந்திரன் முதலில் என்ன கேட்டார்?

''ஐயா, தாங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?'' எனக் கேட்டார்.

9. குருநாதர் தொடர்பால் விவேகானந்தர் தெரிந்து கொண்ட உண்மை என்ன?

கடவுள் என ஒருவர் இருக்கிறார். அனுபவத்தால் மட்டுமே அவரை அறிந்து கொள்ளலாம் என்ற உண்மையை அறிந்து கொண்டார்

10. இராமகிருஷ்ணர் எப்போது இறைவனடி சேர்ந்தார்?
1886ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் திகதி

11. நரேந்திரன் எப்போது துறவு வாழ்க்கைமேற்கொண்டான்?
இராமகிருஷ்ணர் இறைவனடி சேர்ந்த பின்னர் சுவாமி விவேகானந்தர் என அழைப்பர்.

12. சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவால் கவரப்பட்ட மேலை நாட்டினர் யார்?

சேவியர் தம்பதிகளும், சகோதரி நிவேதிதை குழுவினருமாகும்.

13. இந்துசமயத்தை அமெரிக்காவில் பரப்ப அவர் மேற்கொண்ட நடவடிக்கை எதுவாகும்?

1897ஆம் ஆண்டில் சான்பிரான்சிஸ்கோ என்ற இடத்தில் சங்கம் ஒன்றையும், ''சாந்தி ஆச்சிரமம்'' ஒன்றையும் நிறுவினார்.

14. சுவாமி விவேகானந்தர் எப்போது கொழும்பு வந்தார்?
1897-ஆம் ஆண்டு சனவரி 5-ஆம் திகதி

15. சுவாமி விவேகானந்தர் நினைவாக நிறுவப்பட்ட சபை எதுவாகும்?
கொழும்பு விவேகானந்த சபையாகும்

16. இராமகிருஷ்ண சங்கம், இராமகிருஷ்ண மடங்கள் என்பன யாரால் ஆரம்பித்து வைக்கப்பட்டன?
சுவாமி விவேகானந்தரால்

17. 1895ல் சுவாமி விவேகானந்தர் நியூயோர்க்கில் பேசிய போது கூறிய கருத்து என்ன;

''ஏழைகளுக்காக எவனது இதயம் குருதி கசிகிறதோ அவனையே மகாத்மா'' என்கிறேன் எனக் குறிப்பிட்டார்

4

18. சுவாமி விவேகானந்தர் எப்போது இறைவனடி சேர்ந்தார்?
1903ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்தார்

## 15, சம்பந்தர் தேவாரம்

1. சம்பந்தர் தேவாரம் எத்தனையாம் திருமுறையாகும்?
முதல் மூன்று திருமுறைகளுக்குள் அடங்கும்.

2. கண்ணப்பநாயனாரின் பேரன்பு வெளிப்பட்ட தலம் எது?
திருக்காளத்தி (இதை சீகாளத்தி எனவும் அழைப்பர்)

3. திருக்காளத்தியின் இயற்கை அழகை வருணித்து சம்பந்தர் பாடிய பதிகம் எது?
''சந்தமார் அகிலொடு'' எனும் பதிகமாகும்

4. ''சந்தாமர் அகிலொடு'' பதிகத்தின் பண் எதுவாகும்?
பண் : கொல்லி ஆகும்

5. உமையம்மையார் சிவனைப் பூசித்து இடப்பாகம் பெற்ற தலம் எது?
திருக்கேதாரம் ஆகும்

6. காளத்தியிலிருந்து சம்பந்தர் பாடிய பதிகம் எது? அதன் பண்பு எது?
''தொண்டரஞ்சு களிறும்'' என்னும் பதிகம், பண்: செவ்வழி.

7. இண்டை என்றால் என்ன?
தலைமாலை

8. திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஈழத்து தலங்கள் எவை?
திருக்கேதீச்சரமும், திருக்கோணச்சரமுமாகும்.

9. திருக்கேதீச்சரம் எங்கேயமைந்துள்ளது. இதன் தீர்த்தத்தின் பெயர் என்ன?
மன்னார் மாவட்டத்தில் உள்ள மாந்தை எனும் மாதோட்ட நகரில் அமைந்துள்ளது. இதன் தீர்த்தம் பாலாவியாகும்.

10. திருக்கேதீச்சர இறைவன் அறமுரைத்த சிறப்பைச் சம்பந்தர் எப்பதிகத்தில் கூறியுள்ளார்? அதன் பண் என்ன?
''பண்டுநால்வருக்கு'' என்ற பதிகத்தில் பண் நட்டராகம் ஆகும்.

## 16, அப்பர் தேவாரம்

1. அப்பர் தேவாரங்கள் எத்தனையாம் திருமுறையாகும்?
4-ஆம் திருமுறைதல் 6-ஆம் திருமுறைவரையாகும்,

2. உயிர்களின் பாவங்கள் அழிவதற்கு ஒவ்வொருவரும் உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய சைவ உண்மைகள் எதில் விளக்கப்பட்டுள்ளன?
பாவநாசத் திருக்குறுந் தொகையில் விளக்கப்பட்டுள்ளன.

3. நம்பிக்கையோடு புண்ணிய தீர்த்தமாடினால் பாவம் அகன்றுவிடுமென அப்பர் பாடிய "பாவநாசத் திருக்குறுந் தொகை" பாடல் எது?
"கங்கை யாடிலேன்" எனத் தொடங்கும் பாடலாகும்

4. "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் இறுதிவரி கொண்ட அப்பரின் தேவாரம் எது?
"நங்கடம்பனை" எனும் பதிகமாகும்

5. அப்பர் கடைப்பிடித்த மார்க்கம் எது?
தாச மார்க்கம் ஆகும்.

6. "தாண்டகவேந்தர்" என அழைக்கப்பட்டது யார்?
அப்பராகும்.

7. அப்பர் சிவபக்தர்களைக் கடவுளாகக் கொள்ளும் தகுதியை வற்புறுத்திப் பாடிய தனித் தாண்டகம் எது?
"சங்கநிதி பதுமநிதி" என்னும் தாண்டகமாகும்.

## 17. சுந்தரர் தேவாரம்

1. சுந்தரர் தேவாரம் எத்தனையாம் திருமுறையாகும்?
7-ம் திருமுறையாகும்

2. சுந்தரர் மணந்த பெண்களின் பெயர் என்ன?
பரவையார், சங்கிலியார்.

3. சுந்தரருக்கு ஏன் கண்பார்வையில்லாமல் போனது?
சங்கிலியாருக்குக் கொடுத்த வாக்குறுதி தவறியதால் கண் பார்வை இல்லாமல் போனது

4. சுந்தரருக்கு ஊன்றுகோல் கிடைத்த தலமெது?
திருவெண்பாக்கம்

5. திருவெண்பாக்கத்தில் சுந்தரர் பாடிய பதிகமெது? அதன் பண் என்ன?
''பிழையுளெனப் பொறுத்திடுவீர்'' எனும் பதிகம் பண்:- சீகாமரம்

6. சுந்தரருக்கு இடக்கண் பார்வை கிடைத்த தலமெது?
திருக்கச்சியேகம்பம் எனும் தலமாகும்

7. இடக்கண் பார்வை பெற்றபோது சுந்தரர் பாடிய பதிகம் எது? அதன் பண் என்ன?
''ஆலந்தானுகந் தமுதுசெய்தானை'' எனும் பதிகம் பண்:- தக்கேசி

8. சுந்தரரின் பாடல் பெற்ற ஈழத் தலமெது?
திருக்கேதீச்சரமாகும்.

9. இராமேச்சரத்திலிருந்து திருக்கேதீச்சரநாதரின் கருணைச் சிறப்பைக் கூற சுந்தரர் பாடிப பதிகம் எது? அதன் பண் எது?
''மூவாரென இருவரென'' எனும் பதிகம்.
பண் :- நட்டபாடை

10. ''மூவரென இருவரென'' எனும் பாடலில் குறிப்பிடப்படும் மூவரும், இருவரும் யார்?
மூவர் — பிரமா, விஷ்ணு, உருத்திரன்
இருவர்—சிவம், சத்தி

# 18. திருவாசகம்

1. மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும் எத்தனையாம் திருமுறையாகும்?
எட்டாந் திருமுறையாகும்.

2.. திருவாசகத்தை மாணிக்கவாசகர் சொல்ல எழுதியவர் யார்?
எழுதியவர் இறைவனாகும்.

3. திருச்சதகம் எங்கு பாடப்பட்டது?
திருப்பெருந்துறையில் பாடப்பட்டது.

4. திருச்சதகம் என்பதன் பொருள் என்ன?
திரு = தெய்வத்தன்மை, சதகம் = நூறுபாடல் தொகுதி
தெய்வத்தன்மை பொருந்திய நூறு பாடல் தொகுதி எனப் பொருள்படும்.

5. இறைவனின் வியாபகத்தைத்தெளிவாகக் கூறும்பாடல் எது?
''வானாகி மண்ணாகி'' என்னும் பாடலாகும்.

6. இறைவன் உயிர்கள் மீது வைத்த அன்பினால் உருவத் திருமேனி தாங்கிவந்து செய்யும் அருள் விளையாடல்களைக் கூறும் பாடல் எது?
''காட்டகத்து வேடன்'' என்னும் பாடலாகும்.

7. அருச்சுனன் எதைப் பெறுவதற்காகச் சிவபிரானை நினைத்துத் தவம் செய்தான்?
பாசுபத அஸ்திரத்தைப் பெற விரும்பி

8. கோத்தும்பி என்றால் என்ன?
அரச வண்டு எனப் பொருள்படும்.

9. திருக்கோத்தும்பிப் பாடல் எதைக் குறிக்கிறது?
சிவனோடு ஐக்கியமடைவதைக் குறிக்கிறது.

10. கண்ணப்பநாயனார்மீது தமக்குள்ள மதிப்பை மாணிக்கவாசகர் வெளிப்படுத்திய பாடல் எது?
''கண்ணப்பன் ஒப்பதோர்'' என்ற பாடலாகும்.

## 19. திருவிசைப்பா

1. திருவிசைப்பா எத்தனையாம் திருமுறையிலடங்கும்?
9-ஆம் திருமுறையிலடங்கும்.

2. திருவிசைப்பா பாடியோர் யார்?
1. திருமாளிகைத் தேவர், 2. கருவூர்த் தேவர்,
3. கண்டராதித்தர், 4. புருடோத்தம நம்பி,
5. பூந்துருத்தி நம்பி, 6. காட நம்பி சேதிராயர்,
7. வேணாட்டடிகள், 8. திருவாலியமுதனார்,
9. சேந்தனார் ஆகிய ஒன்பதுபேராகும்.

3. சோளேச்சர நாதரைச் சிறப்பித்துக் கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பா எது? அதன் பண் என்ன?
''அன்னமாய் விசும்பு'' என்ற திருவிசைப்பா.
பண்:- பஞ்சமம்

4. சிவபிரானின் பரத்துவத்தை விளக்கும் கதை எது?
பிரமாவும் விட்டுணுவும் அடி முடி தேடிய கதையாகும்.

## 20. திருப்பல்லாண்டு

1. திருப்பல்லாண்டு எத்தனையாம் திருமுறையில் அடங்கும்?
இதுவும் 9-ஆம் திருமுறையிலடங்கும்.

2. திருப்பல்லாண்டைப் பாடியவர் யார்?
சேந்தனார்.

3. எந்தச் சந்தர்ப்பத்தில் திருப்பல்லாண்டு பாடப்பட்டது?
ஒருமுறை சிதம்பரத்தில் மார்கழியில் திருவாதிரையன்று தேர் பூமியில் அழுத்தியபோது சேந்தனாரால் அத்தேர் அசைந்தோடப் பாடியதே திருப்பல்லாண்டாகும்.

4. ''மன்னுக தில்லை'' எனத் தொடங்கும் திருப்பல்லாண்டின் பண் எதுவாகும்?
பண்:- பஞ்சமம் ஆகும்.

## 21. திருமந்திரம்

1. திருமந்திரம் எத்தனையாம் திருமுறையில் அடங்கும்?
10ம் திருமுறையில் அடங்கும்.

2. திருமந்திரம் அருளிச் செய்தது யார்?
திருமூலர்.

3. தமிழில் எழுந்த முதல் ஞானநூல் எது?
திருமந்திரமாகும்.

4. திருமந்திரத்தை ''தமிழ் ஆகமம்'' எனக் கூறக் காரணம் என்ன?
ஆகம நூல்களில் கூறப்படும் பொருட்களைத் தமிழில் தருவதால் ''தமிழ் ஆகமம்'' என்பர்.

5. திருமந்திரம் விளக்கும் ஒன்பது பொருட்களுமெவை?
நல்லொழுக்கம், அறவாழ்க்கை, யோகப் பழக்கம், மந்திர நுட்பம், சமய ஒழுக்கம், குருநெறி நிற்றல், அகப்புற உணர்வு அருள் நுகர்வு, பேராப் பெருவாழ்வு என்பனவாகும்.

6. திருமந்திரத்தின் பிழிந்த ஞான உரை எதுவாகும்?
''அன்பே சிவம்'' என்பதாகும்.

7. திருமந்திரம் எத்தனை பாடல்களைக் கொண்டது?
3000 பாடல்களைக் கொண்டது.

8. திருமூலரைத் தாயுமானவர் எவ்வாறு சிறப்பிக்கின்றார்?
''சக்கரவர்த்தி தவராச யோகி எனும மிக்க திருமூலன்'' எனச் சிறப்பிக்கின்றார்.

9. ''என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' எனக்கூறிய நாயனார் யார்?
திருமூலர்.

## 22. அற்புதத்திருவந்தாதி

1. அற்புதத் திருவந்தாதி எத்தனையாம் திருமுறையிலடங்கும்?
11-ஆம் திருமுறையிலடங்கும்.

2. அற்புதத் திருவந்தாதியை அருளிச் செய்தது யார்?
காரைக்காலம்மையாராகும்.

3. காரைக்காலம்மையார் அருளிச் செய்த ஏனைய பிரபந்தங்கள் எவை?
1. மூத்த திருப்பதிகம் 2. திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம், 3. திருவிரட்டை மணிமாலை என்பனவாகும்.

4. அந்தாதி என்றல் என்ன?
முதற் செய்யுளின் முடிவு அடுத்த செய்யுளின் தொடக்கமாகும்.

5. அற்புதத் திருவந்தாதி எத்தனை வெண்பாக்களைக் கொண்டது?
101 வெண்பாக்களைக் கொண்டது.

6. காரைக்காலம்மையாரின் இயற் பெயர் என்ன?
புனிதவதியார்

## 23. மெய்யடியார்களின் மாண்பு

1. பெரிய புராணம் எத்தனையாம் திருமுறையில் அடங்கும்?
12-ஆம் திருமுறையில் அடங்கும்.

2. பெரியபுராணம் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
திருத்தொண்டர் புராணம், ஆளுடைய நம்பி புராணம் எனப்படும்.

4. பெரியபுராணம் எனப் பெயர் வரக் காரணம் என்ன?
செயற்கரிய கருமங்களைச் செய்த பெரியார்களின் வரலாற்றைக் கூறுவதால் பெரிய புராணம் எனப்படும்.

5. ஐம்பூதங்கள் எவை?
நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ.

## 24. உபநிடதச் சிந்தனை

1. எமது சமயத்தின் முதனூல்கள் எவை?
வேதம், சிவாகமம் என்பன முதனூல்களாகும்

2. உபநிடதங்கள் எந்த மொழியில் ஆக்சப்பட்டவை?
வடமொழியில் எழுதப்பட்டவை.

3. உபநிடதங்களை பாரசீக மொழியில் மொழி பெயர்ப்பு செய்தவர் யார்?
இந்தியாவின் மொகாலயப்பேரரசன் ஷாஜஹானின் மூத்த மகனாகிய தாரஷிகோ என்பவனால் மொழிபெயர்க்கப் பட்டன

4. உபநிடதச் சிந்தனைகளால் கவரப்பெற்ற ஜேர்மன் தத்துவ ஞானி யார்?
ஷொப்பன்னோவர் என்பவர்.

5. வேதம் ஒரு அடர்ந்த பெருத்த மரமாகக் கொள்ளப்படின் அதன் பழுத்த கனியாகக் கொள்ளக் கூடியது எது?
உபநிடதங்கள்

## கடோப நிடதம்

6. ''விஸ்வஜித்'' என்னும் யாகம் செய்து நற்பயனைப் பெற விரும்பியவர் யார்?
வாஜசிரவசு என்னும் பிராமணன்.

7. வாஜசிரவசு தன்மகன் நசிகேதனை யாருக்குத் தானமாகக் கொடுத்தார்?
யமனுக்குத் தானமாகக் கொடுத்தார்.

8. நசிகேதன் யமலோகத்தில் இயதர்மராசாவிடம் கேட்ட வரங்கள் எவை?
1. எனது தந்தையின் மனம் அமைதி அடையவேண்டும். உம்மிடமிருந்து விடைபெற்று நான் வீட்டை அடையும் போது அவர் என்னை இன்முகத்துடன் வரவேற்கவேண்டும்.
2. அக்கினி யாகம் பற்றி எனக்கு விளக்க வேண்டும்.
3. பரம்பொருளைப் பற்றிய விளக்கம் தருமாறு கேட்டான்

9. இயம தர்மராசன் நசிகேதனுக்கு வழங்கிய நித்திய வாழ் வின் இரகசியம் பற்றிய உபதேசம் எவ்வாறு அழைக்கப் படும்?
''கடோபநிடதம்'' எனப்படும்

சாந்தோக்கிய உபநிடதம்

9. சுவேதகேதுவின் தந்தை யார்?
உத்தாலகர்.

10. உலகம் முழுவதும் கண்ணுக்குப் புலப்படாத பரம்பொருளி லிருந்து உண்டானது என்பதை உத்தாலகர் எவ்வாறு விளக்குகிறார்?
மகன் சுவேதகேதுவிடம் ஆலம்பழத்தை எடுத்துக் கிள்ளிப் பார்க்கச்சொன்னார். அதனுள் சிறிய விதைகள் தெரிந்தன. விதையில் ஒன்றைக் கிள்ளிப்பார்க்கச் சொன்னார். அதனுள் ஒன்றும் தெரியவில்லையென மகன் கூறியபோது ஒன்றுமே தெரியாத இந்த விதையிலிருந்து பெரிய ஆலமரம் தோன் றுவதுபோல, கண்ணுக்குப் புலப்படாத பரம்பொருளி லிருந்தே இந்த உலகம் முழுவதும் உண்டானது.

11. இறைவனின் வியாபகம் பற்றி உத்தாலகர் மகனுக்கு எவ் வாறு விளக்கினார்?
நீர் நிறைந்த பாத்திரத்தில் போடப்பட்ட உப்பு கரைந்து நீர் முழுக்க செறிந்துள்ளது போல இறைவனும் உலகில் உள்ள பொருட்கள் யாவற்றிலும் உள்ளான் என விளக்கி னார்.

## 25. சத்தியமே வெல்லும்

1. சத்தியமே எல்லா அறங்களுக்கும் வித்து என்ற உண்மையை வள்ளுவர் எந்தக் குறள் மூலம் விளக்குகிறார்?
"பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமுந்தரும்" எனும் குறள் மூலம் விளக்குகிறார்.

2. சத்தியம், அகிம்சை என்பவற்றிற்கு யாருடைய வாழ்க்கை எடுத்துக்காட்டாகும்?
காந்தியடிகளின் வாழ்க்கை எடுத்துக்காட்டாகும்.

3. இந்து சமயம் பன்னெடும் காலமாகப் போற்றிவரும் பண்புகளெவை?
   1. கடவுள் நம்பிக்கை அவசியம்
   2. உயிர்களிடத்து அன்பாய்ப் பழகுதல் வேண்டும்.
   3. மக்களுக்கு நாம் சேவை செய்தல் வேண்டும்.
   4. மனத்திலே தூய சிந்தனைகள் வளர்த்தல் வேண்டும்.

4. காந்தியடிகள் எப்போது, எங்கே பிறந்தார்?
1869 ஆம் ஆண்டு இந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் குஜராத் என்ற இடத்தில் பிறந்தார்.

5 காந்தியடிகளின் தாய் தந்தையர் யார்?
தந்தை:- கரம்சந்திரர், தாய்:- புத்லிபாய்.

6. காந்தியடிகளின் இயற் பெயர் என்ன?
மோகனதாஸ் ஆகும்.

7. காந்திபடிகள் எப்போது அமரத்துவம் அடைந்தார்?
1948-ஆம் ஆண்டு.

8 எதன் மூலம் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இந்தியாவிற்கு விடுதலை பெறறுக் கொடுத்தார்?
ஆன்மீக பலத்தினால் பெற்றுக்கொடுத்தார்.

9. இறைவனைப்பற்றி காந்திபடிகள் கொண்டிருந்த கருத்து என்ன?
"'ஆண்டவன் எங்கேயோ வானத்திலிருந்து ஆட்சி புரிய வில்லை, நமக்குள் மறைந்து நிற்கிறான்; நம்முடைய ஊனுக்குள்ளும், உயிருக்குள்ளும் அந்தரங்கமாக இருக்கின் றான்' என்பதாகும்.

10, காந்தியடிகளின் வாழ்க்கைச் சரித நூலின் பெயர் என்ன?
"சத்திய சோதனை" என்பதாகும்.

11. சத்தியாக்கிரகம் என்ற சொல்லின் பொருள் என்ன?
சத்தியத்தில் அல்லது உண்மை நெறியில் உறுதியாய் நிற்றல் என்பதாகும்.

## 26. திருக்குறள்

1. எப்போது எமக்கு ஏற்படும் துன்பங்களை இல்லாமல் செய்ய முடியும்.
தனக்கு நிகர் இல்லாத இறைவனின் திருவடிகளைப் புகலிட மாகக்கொண்டால் மட்டுமே துன்பங்கள் இல்லாமல் போகும்
"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

2. செய்வதற்கு அரியவற்றைச் செய்யக்கூடியவர்கள் யார்? செய்ய முடியாதவர்கள் யார்?

புலனடக்கம் உடையவர்களே செய்வதற்கு அரியனவற்றைச் சாதிக்கக் கூடியவர்கள். இவர்களே பெரியோர், புலனடக்கம் இல்லாதவர்கள் அரிய செயல்களைச் செய்யமாட்டார்கள். சிறியர் ஆகும்.

''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

3. தர்மம் எதுவாகும்?

பொறாமை, ஆசை, கோபம், சடுஞ்சொல் என்ற நான்கு குற்றங்களையும் கடிந்து ஒழுகுவதே தர்மம் அல்லது அறம் ஆகும்.

''அழுக்காறு அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா வியன்றது அறம்''

4. வாழ்க்கையின் ஒழுங்கு எப்போது தடைப்படாது?

பழிக்கு அஞ்சிப் பொருட்களைச் சேர்க்க வேண்டும் அவ்வாறு சேர்ந்த பொருளைப் பிறருடன் பகிர்ந்துபயன்படுத்த வேண்டும். அவ்வாறான நேர்மையுடனும் ஒழுங்குடனும் வாழும்போது வாழ்கையின் ஒழுங்கு தடைப்படாது.

''பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்''

5. ஒருவர் அணிய வேண்டிய அணிகலன்கள் எவை?

ஒருவர் அணிந்துகொள்ளவேண்டிய அணிகலன்கள் பணிவு இன்சொல் ஆகிய இரண்டுமாகும்.

''பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்லமற்றுப் பிற''

6. தீங்கு செய்தவரைப் பொறுத்தவர்க்கும் பொறுக்காதவர்க்கும், இடையில் ஏற்படும் வேறுபாடு என்ன?

பொறுக்காதவர்க்கு ஒரு நாள் இன்பம் மட்டுமே கிடைக்கும் பொறுத்தார்க்கு உலகம் அழியும் வரையும் புகழ் உண்டு.

''ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்''

7. யாருக்கு உயிர்பற்றிய அச்சம் கிடையாது?

எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டும்போது அது அருளாக மாறுகிறது. அப்படிப்பட்ட அருளாளர்களுக்கு

உயிர்பற்றிய அச்சம் கிடையாது ஏனையோர்க்கு சதாரணம் நினைவேயாகும்.

'மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல் என்ப
தன்னுயிர் அஞ்சும் வினை''

8 எது குற்றமும், தகாததுமாகும்?
குற்றச் செயல்களை உள்ளத்தால் எண்ணுதலும், பிறர் பொருளை அவருக்குத் தெரியாமல் கவர்ந்துவிடல் நன்று என எண்ணுதலுமாகும்

''உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்''

9. எதனால் துன்பத்திற்கு ஏதுவான பிறப்பு ஏற்படுகின்றது?
மெய்பொருள் இல்லாதவைகளை மெய்பொருள் என நினைக்கும் மயக்கம் ஏற்படுவதனாலேதான் துன்பத்திற்கு ஏதுவான பிறப்பு ஏற்படுகின்றது.

''பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு''

10. காலம் நீடித்தல், மறதி, சோம்பல், அளவு மீறிய தூக்கம் என்பன எதற்கு ஒப்பானதாகும்?
கெடுக்கின்றவர் விரும்பி ஏறும் மரக்காலத்திற்கு ஒப்பானதாகும்

''நெடுநீர், மறவி, மடி, துயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

## 27. நாவலர் வளர்த்த நன்னெறி...

1. நாவலர்பெருமான் கொண்டிருந்த இலட்சியம் என்ன?
கல்வியழகும், தெய்வநெறியும் பொலிந்து விளங்கும் ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதாகும்.

2. ''நாவலர்'' என்ற பட்டத்தை வழங்கியது யார்?
தமிழகத்தில் உள்ள திருவாவடுறை ஆதீனமாகும்.

3. உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது எனப் பாடியவர் யார்?
விபுலானந்த அடிகள்.

4. நல்லைநகர் நாவலர் பிறந்திலரேற் சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே... என்று நாவலரைப் புகழ்ந்தவர் யார்?
சீ. வை. தாமோதரம்பிள்ளை

## 28. இறைபணி நிற்றல்

1. இறைபணி நிற்றல் என்றால் என்ன?
இறைவனது பணியிலே வழுவாது நிற்றல் என்பதாகும்.

2. இறைபணி நிற்றல் யார்யார்க்குரிய உயர்ந்த ஒழுக்கமாகும்?
இல்லறத்தார்க்கும், துறவறத்தார்க்கும் உரிய உயர்ந்த ஒழுக்கமாகும்.

3. முத்தியின்பம் பெற இன்றியமையாத மூன்று நிலைமைகள் எவை?
1. மனிதப் பிறவி எடுத்திருத்தல் வேண்டும் 2. வீடு பேற்றை விழைதல் வேண்டும். 3 முத்திக்கு வழிகாட்டும் பெரியாரோடு பழகுதல் வேண்டும்.

4. சைவத்தின் அடிப்படைக் கருத்து எது?
"அன்பே சிவம்" என்பதாகும்.

5. அன்பை வளர்க்க மக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்தும் இரு நிலைகளுமெவை?
1. இல்லறம், 2. துறவறம்

6. அநாதியாகவே ஆணவ மலத்தால் பீடிக்கப்பட்டிருக்கும் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு இறைவனின் அருட் சக்தியினால் படைக்கப்பட்டவை எவை?
உடம்பு, அறிகருவி, உலகம், நுகர்பொருள் இவை முறையே தனு, கரண, புவன, போகம் எனப்படும்.

7. உமாதேவியார் காஞ்சிப் பதியிலிருந்து செய்த 32 அறங்களில் முக்கியமானவை எவை?
1. அறவைச் சோறு, 2. அறவைத் தூரியம், 3. அறவைப் பிணஞ்சுடுதல், 4. அறு சமயத்தோர்க்கு உண்டி 5. ஆதுவர் சாலை 6. ஐயம், 7. ஓதுவார்க்கு உணவு 8. கன்னிகாதானம், 9 கா, 10. சிறைச்சோறு,

11. தடாகம், 12. தண்ணீர்ப்பந்தர், 13. நடைத்தின் பண்டம், 14. நோய் மருந்து. 15 பசுவுக்கு வாயுறை, 16. பிறரறங் காத்தல். 17. மகப்பெறு வித்தல். 18. மகவளர்த்தல் 19 மடம். 20. விலை கொடுத்துக் கொலையுயிர் மீட்டல் என்பன.

8. ''அறவிலை வணிகம்'' என்றால் என்ன?
இம்மையிற் செய்யும் நல்வினைகள் மறுமையில் நற்பலனைத் தரும் என எண்ணி அறச் செயல்களைச் செய்வது அற விலை வணிகம் ஆகும்

9. இல்லறத்திலிருந்தே முத்தியடைந்த நாயனார்கள் யார்?
இளையான் குடிமாற நாயனார், அப்பூதியடிகள், மெய்ப் பொருள் நாயனார்.

10. ''பற்றில்லா வினைகள்'' என்றால் என்ன?
நான் செய்கின்றேன் என எண்ணாமல் இறைவனுடைய திருவருளே என்னைக் கருவியாகக் கொண்டு இவற்றைச் செய்விக்கின்றது எனும் உணர்வோடு செய்பவை பற்றில்லா வினைகள் எனப்படும்.

## 29. சக்தி வழிபாட்டுப் பாடல்கள்

1 அபிராமி அந்தாதி யாரால் பாடப்பட்டது?
அபிராமிப் பட்டரால் பாடப்பட்டது.

2. அபிராமி அந்தாதியில் எத்தனை பாடல்கள் உண்டு?
100 பாடல்கள் உள்ளன.

3. இலக்குமி துதி எந்த நூலில் காணப்படுகிறது.
அதிவீரராம பாண்டியன் பாடிய காசி காண்டம் என்னும் புராணத்தில் காணப்படுகிறது.

4. சகலகலாவல்லி மாலை யாரால் பாடப்பட்டது?
குமரகுருபர சுவாமிகளால் பாடப்பட்டது.

5. சகலகலாவல்லி மாலையை வேறு எவ்வாறு அழைப்பர்?
''சரஸ்வதி தோத்திரம்'' என அழைப்பர்.

## 30. இந்து சமயப் பழக்க வழக்கங்கள்

1. இந்து வீடு ஒன்றின் முன்றலில் காணப்படுவன எவை?
கோலம், வாயிலில் மாவிலை, சரங்கள் என்பன.

2. இந்துப் பெண்மணி ஒருவர் எவ்வாறு காணப்படுவார்?
கூந்தலில் மல்லிகை மாலையுடனும், நெற்றியில் குங்குமப் பொட்டுடனும் காணப்படுவார்.

3. இந்துக்கள் நீர் அருந்தும்போது எவ்வாறு பருகுவர்?
பாத்திரம் வாயில் படாதவாறு அண்ணாந்து பருகுவர்.

4. சைவ மக்கள் நெற்றியில் பொட்டிடுதல் எதனைக் குறிக்கும்?
மெய்யறிவைக் காணும் கண்ணாகப் பாவனை செய்யும் தத்துவத்தைக் குறிக்கின்றது.

5. சைவ மக்கள் எத்தகைய பண்புள்ளவர்கள்?
சகல சீவராசிகளிடத்திலும் அன்பும், இரக்கமும், அன்பு நெறி நின்றொழுகும் தன்மையும உடையவர்கள.

6. ஒரு சைவனுடைய வீட்டில் நடைபெறும் பெரு நிகழ்ச்சிகளில் முக்கியமானது எது?
திருமணம்.

7. திருமணத்தின் போது வளர்க்கப்படும் ஓமாக்கினி எதைக் குறிக்கும்?
இறைவன் அறிவொளிவடிவானவன் என்பதை குறிக்கும்.

8. நிறைமாந்தர் என அழைக்கப்படுவது யாரை?
தாரத்தோடு இல்லற வாழ்வு நடாத்தும் ஆடவரும், சுமங்கலிகளான பெண்களும் நிறைமாந்தர் எனப்படுவர்.

9. எப்போது மணமகள் மணமகனுக்குப் பூரண உரித்துடையவளாகின்றாள்?
தாலிகட்டியதன் பின்னர்

10. சைவ இல்லறத்தில் நடைபெறும் இன்னொரு சடங்கு எது?
மரணக்கிரியையாகும்.

11. சைவ இல்லம் ஒன்றில் இறந்தவரின் உடல் எவ்வாறு வைக்கப்படும்?
வடக்கு தெற்காக - தெற்கே தலைவைத்து வைக்கப்பட்டு தலைமாட்டில் குத்து விளக்கேற்றப்படும்.

12. மரண வீட்டை எவ்வாறு அடையாளம் காணலாம்?
மாவிலைத் தோரணம் கட்டி அத்தோடு காய் வாழைக்குலையுடன் கூடிய வாழை மரங்கள் கட்டப்படும்.

13. சுண்ணம் இடிக்கும் போது பாடப்படும் பதிகம் எது?
மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருப்பொற் சுண்ணப் பதிகம் பாடப்படும்.

14. இறந்தவரின் உடலை நீராட்டப்பயன்படும் பொருட்கள் எவை?
இடித்த சுண்ணாம்பு, பால், இளநீர், பன்னீர் என்பன

15. இறந்தவரின் உடல் எரித்த சாம்பரை என்ன செய்வர்?
கடல், ஆறு முதலிய நீர் நிலைகளிற் சேர்த்துவிடுவர்.

சோதி வெளியீட்டு வாரியத்தினரின்

## ஏனைய வெளியீடுகள்

இந்நூலாசிரியரின் ஆக்கங்கள்.

1. வரலாறும்
   சமூகக்கல்வியும் ஆண்டு 7, 10, 11
   துரித மீட்டலுக்கான வினாவிடை
2. சமூகக்கல்வி ஆண்டு 9
   துரித மீட்டலுக்கான வினாவிடை
3. சைவநெறி ஆண்டு 8, 10; 11
   துரித மீட்டலுக்கான வினாவிடை
4. சைவநெறி ஆண்டு 7 (அச்சில்)

ஏக விநியோகத்தர்கள்:-

1. சோதி புத்தகசாலை
   கச்சாய் வீதி (மக்கள் கடைக்கு அருகில்)
   சாவகச்சேரி.
2. ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
   235, காங்கேசன்துறை வீதி,
   யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிவு சோதி அச்சகம், சாவகச்சேரி.